<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 87/2022 | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.சரவணகுமார் | | | |
| **Date** | **:** | **22.07.2025** | | | |
| **Time** | **:** | **10.55 a.m to 11.26 a.m** | | | |

<u>நி.த.சா.**1.**திரு.சரவணகுமார் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நிர்வாகம் எனக்கு அங்கீகாரம் கடிதம் வழங்கியுள்ளது. வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. மஞ்சுநாத் அவருக்கு எதிராக நடைபெற்ற உள்துறை விசாரணையில் நான் பங்கு பெறவில்லை. உள்துறை விசாரணையின் தினசரி நடவடிக்கையில் நான் பங்கு பெறவில்லை ஆனால் HR-Head என்ற முறையில் நடைபெறும் விவரங்கள் எனக்கு தெரியும். உள்துறை விசாரணையின் தினசரி நடவடிக்கை யார் மூலமாக எனக்கு தெரியவரும் என்றால் நிர்வாக பிரதிநிதி மூலமாக தெரிய வரும். கௌதமன் என்பவர் எங்கள் நிர்வாகம் தரப்பில் நடந்த உள்துறை விசாரணைகளில் ஏற்கனவே பங்கு பெற்ற நபர் என்றால் இல்லை. கௌதமனை உள்துறை விசாரணை அதிகாரியாக நியமிப்பதற்கு தொழிற்சங்கத்துடன் ஏதேனும் பேச்சுவார்த்தை நடைபெற்றதா என்றால் இல்லை. நிர்வாக பிரதிநிதி ஞானசுப்பிரமணியம் என்பவராவார். அவர்

குவாலிட்டி பிரிவு ஹெட் ஆக இருந்தார். அவர் B.E படித்திருக்கிறார் என நினைக்கிறேன். ஞானசுப்பிரமணியன் அவர்களுக்கு நிர்வாகப் பிரதிநிதியாக பங்கெடுத்த அனுபவம் ஏற்கனவே உள்ளதா என்றால் எங்கள் நிறுவனத்தில் இல்லை. ஞானசுப்பிரமணியன் எங்கள் நிறுவனத்தில் 8 ஆண்டுகள் பணிபுரிந்தார். ஞானசுப்பிரமணியனை பிரதிநிதியாக நியமனம் செய்த விவரம் மனுதாரருக்கு கடிதம் மூலமாக தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவிக்கப்பட்டது எப்போது தெரிவிக்கப்பட்டது என்றால்உள்துறை விசாரணை முடிவு செய்யப்பட்ட உடனே அவருக்கு தெரிவிக்கப்பட்டது. அது நி.சா.ஆ.10. நி.சா.ஆ.10. மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது என்பதை காட்ட சான்று உள்ளதா என்றால் தெரியவில்லை. KPMG Report முழுமையானது இல்லை Draft report என்றால் ஆமாம். அதன் இறுதி அறிக்கை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. KPMG ஆடிட்டர் நியமனம் செய்ததற்கான உத்தரவு உள்ளதா என்றால் இல்லை. ஸ்பெயின் நாட்டில் இருந்து நேரடியாக நியமனம் செய்யப்பட்டது ஆகும். அந்த அறிக்கையில் KPMG நிறுவனத்தின் மேலாளர் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. நரோத்தம் குமாரின் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. நி.சா.ஆ.1 முதல் 27 வரை உள்ள ஆவணங்கள் உள்துறை விசாரணையில் சாட்சி மூலமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் ஆமாம். நி.சா.ஆ.30 முதல் 37 வரை உள்ள ஆவணங்கள் உள்துறை விசாரணையில் சாட்சி மூலமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் தெரியவிலலை. பட்டியலில் சொல்லப்பட்டுள்ள அனைத்து நிர்வாக தரப்பு சாட்சிகளும்

விசாரிக்கப்பட்டுள்ளார்களா என்றால் இல்லை. தினகரன் என்பவர் அந்த சமயத்தில் தொழிற்சங்கத்தின் தலைவராக இருந்தார். வேலையை விட்டு சென்று இருந்தார். மனுதாரருக்கும் தினகரனுக்கும் இடையே முன் விரோதம் தொழிற்சங்கம் சம்பந்தமாக இருந்த விவரம் தெரியுமா என்றால் என் கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை. தினகரன், மனுதாரர் உட்பட அப்போதைய தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு எதிராக அவதூறான செய்கையில் ஈடுபட்டு வருகிறார் என்பது பற்றி மனுதாரர் நிர்வாகத்திற்கு தெரிவித்தது பற்றி தெரியுமா என்றால் மனுதாரர் கொடுத்த ஏதோ ஒரு பதிலில் அது போன்று குறிப்பிட்டு இருந்தார். தினகரன், மனுதாரருக்கு எதிராக புகார் எதுவும் கொடுத்திருக்கிறார் என எனக்கு தெரிந்தவரையும் தெரியவில்லை. தினகரனை ஏன் சாட்சி பட்டியலில் நிர்வாகம் சேர்த்தது என்றால் தெரியவில்லை. வழக்கில் அனைத்து ஆவணங்களையும் படித்து பார்த்தேன். நிர்வாகம் என்ன பதில் அளித்தது போன்ற அனைத்து விவரங்களும் எனக்கு நேரடியாக தெரியும். உள்துறை விசாரணையில் என்னுடைய ஒப்புதல் இல்லாமல் ஞான சுப்பிரமணியன் ஏதேனும் செயலில் ஈடுபட முடியுமா என்றால் நான் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரி இல்லை எனக்கும் மேல் அதிகாரிகள் உள்ளார்கள் அவர்கள்தான் முடிவு செய்ய இயலும். உள்துறை விசாரணை நடைபெற்ற சமயத்தில் ஞான சுப்பிரமணியன் என்னை கலந்து ஆலோசித்தாரா என்றால் இல்லை என் மேல் அதிகாரிகளை கலந்து ஆலோசித்தார். அப்போது இருந்த மேலதிகாரி பிளான்ட் டைரக்டர் மனிஷ் உபாத்தியாயா ஆவார். மனுதாரரின் பணி நியமன அதிகாரி HR-

Head இருக்கலாம். சுஜாதா என்பவர் ஹெச்.ஆர் உதவி மேனேஜர் அல்லது டெப்டி மேனேஜராக இருந்திருக்கலாம். அவர்கள் என்னுடைய மேல் அதிகாரியா என்றால் இல்லை. ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தமாக சுஜாதா அவர்களுக்கு நிர்வாக தரப்பில் ஏதேனும் அதிகாரம் வழங்கப்பட்டு இருந்ததா என்றால் தெரியவில்லை. ஹெச்.ஆர் என்ற முறையில் அவர் ஒருங்கிணைந்து செயல்பட்டு இருக்கலாம். எங்கள் நிறுவனத்தின் சான்றிட்ட நிலையாணை தாக்கல் செய்ய இயலும்.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.07.22 13:35:31 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:22.07.2025.